2. தகவல் கோரல்

அவசரச் சட்டம் நிராகரிக்கப்பட வேண்டுமென்ற தனி தீர்மானம் குறித்து.

திரு. துரை முருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் தங்களுக்கும் செயலாளர் அவர்களுக்கும் தமிழ்நாடு Ordinance No. 2 of 1978 என்கின்ற சட்டத்தை டிஸ் அப்ரூவ் செய்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். நான் நோட்டீஸ் கொடுத்திருப்பது under Article 213 (2) of the constitution. எங்கள் தீர்மானம் என்னவென்றால்..

" This House disapproves Tamil Nadu ordinance No. 2 of 1978 as the said ordinance is completely anti . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் தங்களுடைய ஒழுங்குப் பிரச்னையை மட்டும் சொல்லுங்கள். தயவுசெய்து தாங்கள் கடமையுணர்வோடு பேசுங்கள். நான் கொடுத்திருந்த நோட்டீஸ் என்ன ஆயிற்று என்று மட்டும் கேளுங்கள். அப்படி கேட்பதற்குப் பதிலாக விவரங்களை எல்லாம் இங்கு எடுத்துச் சொல்ல வேண்டாம். அந்தத் தீர்மானத்தை எல்லாம் படிக்க வேண்டாம். . . .

திரு. துரை முருகன் : சரி, படிக்கவில்லை. கருத்தை மட்டும் சொல்லி விடுகிறேன்.

This House disapproves the Tamil Nadu Ordinance No .2 of 1978 as the said Ordinance is anti-labour and against the universly legitimate and recognised right of the workers என்று ஒரு தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன்.

நான் ஒரு ரெசலூஷன் கொடுத்திருந்தேன். அதை அஜண்டா விலே சேர்க்க வேண்டுமென்று தங்களுக்குத் தனியாகக் கடிதம் எழுதியிருக்கிறேன். நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, அச்சட்டம் ஆறு மாதங்களுக்குள்ளாக தானாக காலாவதியாகி விடும் என்றார்கள். அசெம்பிளி இருந்தால் ஆறு வாரம், இல்லாவிட்டால் ஆறு மாதம். அதற்கு 'பில்' கொண்டுவரப் போவதில்லை; தானாகச் செத்துப் போகும் என்றார்கள். நான் கொடுத்திருப்பது, எங்களுடைய கன்டென்ஷன், இந்த ஆர்டர் போட்டதே தவறு அதை டிஸ் அப்ரூவ் செய்ய நடவடிக்கை எடுக்க இந்த அவைக்கு உரிமையுண்டு என்று தெரிவித்து ஒரு ரெசலூஷன் கொடுத்திருக்கிறேன், அது குறித்து தங்களுக்கு ஒரு மடல் எழுதியிருக்கிறேன். அதை எப்போது எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள் ?

1978 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இப்படி எழுதிக் கொடுத்து விட்டு, இப்போது இங்கே இப்படிக் கேட்பது முறை தானு? என்ன ஆயிற்று என்று எங்கே வந்து கேட்பது என்பது உறுப்பினருக்குத் தெரியாதா? அதை விட்டுவிட்டு, இங்கே இப்படிப் பேசி நேரத்தை வீணுக்கிக் கொண்டிருக்க வேண்டாம். இதைப்பற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்டால் பதில் சொல்கிறேன். இங்கே பதில் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைக் குறித்துதான் படிக்க எழுந்தேன். எனவே, தாங்கள் தயவுசெய்து அமருங்கள். அவர் பேசியது அத்தனையையும் அவைக் குறிப்பேட்டிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

3. அறிக்கை அளித்தல்

(அ) விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் விதி 82—ன் கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மதுரை மற்றும் சென்னைப் பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் கல்லூரி ஆசிரியர் களின் சங்கத்தைச் சார்ந்த கூட்டு செயல் குழு கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது. இப்பொருளில் அரசு மேற் கொண்ட நடவடிக்கைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

1. பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்களை 1-10-78 தேதிக்குள் வழங்க தனியார் கல்லூரி நிர்வாகங்களுக்கு அரசு உத்திரவிட வேண்டும்.

2. பல்கலைகழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்களை வழங் குவதில் ஆசிரியர் நியமனம் குறித்த தனியார் கல்லூரி நிர்வாகங் களில் மறுப்பை காரணம் காட்டி நிறுத்தி வைத்தல் கூடாது.

கல்லூரிகளில் ஆசிரியர்கள் நியமிப்பது குறித்து மத்திய அரசினல் விதிக்கப்பட்டு இவ்வரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் தனியார் கல்லூரி நிர்வாகங்களால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆதலால் இக்கல்லூரிகளில் திருத்திய ஊதிய விகிதங்களை

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.